DEPOSITION OF WITNESS
(CHAPTER XXIII CODE OF PROCEDURE
IN THE COURT OF DISTRICT MUNSIF, VANIYAMBADI, VELLORE DISTRICT

| | |
|---|---|
| Name: கோவிந்தசாமி | Father's Name: குழந்தை கவுண்டர் |
| Village: வளையாம்பட்டு | Taluk: |
| Caste: | Calling: |
| Religion: | Age: 62 |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 on the day of 07.02.2023.

E.P.22/2020 in OS 106/2014 - ம.சா.1

எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை-

01) நான் என்ன பரிகாரம் கேட்டு இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னை மிரட்டி போலீசாரும், பஞ்சாயத்தார்களுடன் சேர்ந்து ரூ.30,000/– என்னிடமிருந்து பெற்றுக்கொண்டு எதிர்மனுதாரர்கள் குடும்பத்துடன் வந்து என்னிடம் பிரச்சனை செய்து வருகிறார்கள் அதற்காக தான் இந்த மனுவினை தாக்கல் செய்துள்ளேன். நான் பாகப்பிரிவினை கோரி எப்போது வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் 2014 ஆம் ஆண்டில் தாக்கல் செய்தேன். அசல் வழக்கினை எதிர்மனுதாரர்கள் நடத்தாமல் விட்டதால் ஒருதலைபட்ச தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் சரிதான்.

02) 2018 ஆம் ஆண்டில் இறுதிநிலை தீர்ப்பாணைக்கு பிறகு 28 செண்ட் அளவுள்ள எனது பாகத்தை பொறுத்து நான் சுவாதீனம் பெற்ற பிறகு எதிர்மனுதாரர்கள் என்னுடைய பாக சொத்தை பொறுத்து இடையூறு செய்கிறார்களா என்றால் இடையூறு செய்கிறார்கள். எதிர்மனுதாரர்கள் அவர்களது பாக சொத்திற்குள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்றாலும், எனது பாக சொத்திற்குள் அத்துமீறி நுழையவில்லை என்றாலும் சரியல்ல. கிணறு, பம்புசெட் ஆகியவற்றில் எங்கள் சித்தப்பாவிற்கு அரைபாகம் உரிமை உள்ளது என்றாலும், எஞ்சிய அரைபாகத்தில் எங்கள் 5 பேருக்கும் தலா 1 பாகம் வீதம் நாங்கள் பத்து நாட்களுக்கு ஒருமுறை தான் கிணறு, பம்புசெட்டில் தண்ணீர் இறைக்க முடியும் என்றால் சரிதான்.

03) நான் காவல் நிலையத்தில் என்ன புகார் கொடுத்தேன் என்றால் எனது நிலத்திற்குள் தேங்காய் எடுப்பது மற்றும் பம்புசெட்டை நிறுத்தி பைப்பை உடைத்தார் என தொந்தரவு செய்தது குறித்து புகார் கொடுத்தேன். பம்புசெட்டை உடைத்திருந்தால் எனது சித்தப்பா காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்பார் என்றால் சரியல்ல அவர்கள் எனக்குரிய பம்புசெட் பைப் வால்வை தான் உடைத்தார்கள். மட்டை ஓலைகளுக்கு எதிர்மனுதாரர்கள் தீ வைத்ததாக நான் சொல்லியிருப்பது பொய்யானது என்றால் சரியல்ல அது உண்மைதான். அவ்வாறு தீ வைத்திருந்தால் நான் அதுகுறித்து காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்பேன் என்றால் புகார் அளித்தேன். போலீசார் அது குறித்து விசாரித்தார்களா என்றால் அச்சமயத்தில் கொரோனா பரவல் இருந்தது அதனால் போலீசார் வரவில்லை பிறகு எங்களை தான் மிரட்டினார்கள்.

04) வீட்டை இடித்ததாக நான் சொல்லும் வீடானது எதிர்மனுதாரர்களால் கட்டப்பட்டு அதை நான் சீரமைத்த வீடா என்றால் ஆமாம். அந்த வீட்டை பொறுத்து அசல் வழக்கில் நான் சொல்லியிருந்தேனா என்றால் சொல்லவில்லை. அந்த வீட்டை

எதிர்மனுதாரர்கள் இடிக்கவில்லை என்றாலும், நான் தான் இடித்தேன் என்றாலும் அது உண்மையல்ல. அந்த வீட்டை யார் இடித்தது என்றால் அந்த சொத்தை பொறுத்து என் அக்கா எனக்கு பொது அதிகார பத்திரம் எழுதிகொடுத்துள்ளார், அதனால் அந்த சொத்தை பொறுத்து நாங்கள் சீரமைக்க சென்றபோது எங்களை தடுத்து பிரச்சனை செய்தார்கள்.

05) வீட்டை இடித்ததாக காவல் நிலையத்தில் எதிர்மனுதாரர்கள் புகார் அளித்தார்களா என்றால் அவர்களும் அளித்தார்கள், நானும் அளித்தேன், பின்னர் காவல் நிலையத்திலிருந்து வெளியே பஞ்சாயத்திற்கு அனுப்பி வைத்தனர், அப்போது என்னை பஞ்சாயத்தார்கள் மிரட்டி ரூ.30,000/–த்தை வாங்கி கொண்டு அனுப்பி வைத்தார்கள். பஞ்சாயத்தில் என்னை யாரும் மிரட்டவில்லை என்றாலும், நான் தான் ஒப்புக்கொண்டு நஷ்ட ஈட்டிற்காக ஒப்பந்த பத்திரம் எழுதி கொடுத்தேன் என்றால் சரியல்ல, என்னிடம் எழுதாத வெற்று பேப்பரில் தான் மிரட்டி கையொப்பம் வாங்கினார்கள். நான் யாரிடம் பணம் கொடுத்தேன் என்றால் திருப்பதி கவுண்டரிடம் கொடுத்தேன்.

06) நான் எத்தனை நிறைவேற்று மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் மூன்று மனுக்கள் தாக்கல் செய்துள்ளேன். முதல் மனு சுவாதீனம் கேட்டு தாக்கல் செய்தேன், அதன் பிறகு இரண்டு நிறைவேற்று மனுக்களை தாக்கல் செய்துள்ளேன். அந்த முதல் நிறைவேற்றுகை மனுவில் சமாதானமாக சென்றோமா என்றால் இல்லை, எதிர்மனுதாரர்கள் நாங்கள் பிரச்சனை செய்வதில்லை என எழுதிகொடுத்ததால் அதன்படி முடித்துக்கொண்டோம். இரண்டாவது நிறைவேற்றுகை மனு சமாதானமாக முடிக்கப்பட்டதா என்றால் இல்லை, எதிர்மனுதாரர்களின் முகவரி எங்களால் சரியாக சமர்ப்பிக்க இயலாததால் தள்ளுபடிக்கு விட்டுவிட்டோம். நாங்கள் பொய்யான காரணங்களுடன் இந்த நிறைவேற்றுகை மனுவினை தாக்கல் செய்துள்ளதால் இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்று சொன்னால் சரியல்ல.

குறுக்கு விசாரணை முடிவுற்றது.